



# ஆனந்த பாஸ்கர்

PRGI No: TNMUL/25/A1387

உதயத்தில் உங்களுடன் காலை நாளிதழ்

ANANDA BHASKAR

www.anandabhaskar.com






சென்னை | மலர்: 01 | இதழ்: 145 | 20.11.2025 | வியாழக்கிழமை

Chennai | Volume: 01 | Issue: 145 | Thursday | pages 4 | Rs.5/-


## இன்றைய நாள்

வியாழக்கிழமை

(20-11-2025)

விசுவாவசு ஆண்டு, கார்த்திகை-3

பிறை: தேய்பிறை

திதி

அமாவாசை நண்பகல் 12.31 வரை

பிறகு அனுஷம்

நட்சத்திரம்:

விஷகம் காலை 11.53 வரை

பிறகு அனுஷம்

யோகம்

சித்தயோகம்

ராகுகாலம்

நண்பகல் 01.30 – 3.00 மணி

எமகண்டம்

காலை 6.00 – 7.30 மணி.

சூலம் –தெற்கு.

நல்ல நேரம் :

காலை 9–10 மணி.

மாலை 4–5 மணி.

| | |
|---|---|
| மேஷம் | களிப்பு |
| ரிஷபம் | மேன்மை |
| மிதுனம் | பொறுமை |
| கடகம் | வரவு |
| சிம்மம் | அமைதி |
| கன்னி | ஊக்கம் |
| துலாம் | ஆதயம் |
| விருச்சிகம் | முயற்சி |
| தனுசு | மாற்றம் |
| மகரம் | ஆதயம் |
| கும்பம் | நிறைவு |
| மீனம் | பயணம் |

### இயற்கை வேளாண் மாநாடு

# விவசாயிகளுக்கு ரூ.18 ஆயிரம் கோடி நிதியை விடுவித்தார் பிரதமர் மோடி

கோவை, நவ.20: கோவை கொடிசியா வளாகத்தில் தமிழ்நாடுஇயற்கைவேளாண்மை கூட்டமைப்பு சார்பில் நடைபெறும் தென்னிந்திய இயற்கைவேளாண் மாநாட்டை பிரதமர் மோடி தொடங்கி வைத்தார். இதற்காக ஆந்திர மாநிலம் புட்டபர்த்தியில் இருந்து விமானம் மூலம் கோவை விமான நிலையத்திற்கு மோடி வந்தடைந்தார்.

அங்கு அவருக்கு தமிழக கவர்னர் ஆர்.என்.ரவி மற்றும் அரசு அதிகாரிகள் வரவேற்பு அளித்தனர். தமிழக அரசு சார்பில் அமைச்சர் சுவாமிநாதன் பிரதமர் மோடியை வரவேற்றார்

பின்னர் அவர் அங்கிருந்து கார் மூலம் மாநாடு நடைபெறும் கொடிசியா வளாகத்துக்கு வந்தார். அப்போது வழிநெடுக பாஜக தொண்டர்கள், பொதுமக்கள் பிரதமர் மோடிக்கு உற்சாக வரவேற்பு அளித்தனர்.

இதனைத்தொடர்ந்து தென்னிந்திய இயற்கை விவசாயிகள் கூட்டமைப்பு சார்பில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

இதையடுத்து பிரதமர் மோடி, இயற்கைவேளாண்மை மாநாட்டை தொடங்கி வைத்து, ஆண்டுக்கு ரூ.6 ஆயிரம் உதவித்தொகை வழங்கும் 'பி.எம். கிசான்' திட்டத்தில் 21-வது தவணையாக 9 கோடி விவசாயிகளுக்கு ரூ.18 ஆயிரம் கோடி உதவித்தொகையை வழங்கினார். இந்த திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டை சேர்ந்த 21 லட்சத்து 80 ஆயிரத்து 204 விவசாயிகள் பயன் அடைகின்றனர். இதில் கோவை மாவட்டத்தை சேர்ந்த 44 ஆயிரத்து 837 பேர் பயன்பெறுகிறார்கள்.







முன்னதாக தென்னிந்திய இயற்கைவேளாண் மாநாட்டில் பிரதமர் மோடிக்கு மாலை அணிவித்து மரியாதை செய்த விவசாயிகள், 'மாட்டு வண்டி'யை நினைவுப் பரிசாக வழங்கினர்.

இதனிடையே, இயற்கை விவசாயத்தில் சாதனை படைத்த விவசாயிகளுக்கு பிரதமர் மோடி விருது வழங்கி கவுரவித்தார்.

அதன்பிறகு இயற்கை விவசாயம் செய்து வரும் விவசாயிகள் மற்றும் விஞ்ஞானிகளுடன் பிரதமர் மோடி கலந்துரையாடினார். முன்னதாக, இயற்கை விவசாயிகள் சார்பில் அமைக்கப்படும் அரங்குகளில் விவசாய உற்பத்தி பொருட்களை பார்வையிட்டார். பிரதமருடன் ஆர்வமாக விவசாயிகள் செல்பி எடுத்து கொண்டனர்.

இந்த மாநாட்டில் தமிழகம், கேரளா, ஆந்திரா, கர்நாடகா உள்ளிட்ட மாநிலங்களை சேர்ந்த ஏராளமான இயற்கை விவசாயிகள் கலந்து கொண்டுள்ளனர்.

முன்னதாக மாநாட்டில் பங்கேற்க வந்த பிரதமர் மோடிக்கு 5 அடுக்கு போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது.

மேலும் மாநாடு நடைபெறும் கொடிசியா வளாகம் முழுவதும் பிரதமரின் தனி பாதுகாப்பு படையின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. அங்கு 24 மணி நேரமும் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதுதவிர மாநாடு நடைபெறும் பகுதி உள்ளிட்ட முக்கிய பகுதிகளில் டிரோன்கள் பறக்க தடை விதிக்கப்பட்டுள்ளது. கோவை-அவினாசி ரோட்டில் இருந்து கொடிசியா வளாகம் வரை போலீசார் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

## கோவையில் பிரதமர் மோடியை வரவேற்ற எடப்பாடி பழனிசாமி



கோவை கொடிசியா வளாகத்தில் தமிழ்நாடு இயற்கை வேளாண்மை கூட்டமைப்பு சார்பில் நடைபெறும் தென்னிந்திய இயற்கை வேளாண் மாநாட்டை பிரதமர் மோடி தொடங்கி வைத்தார். இதற்காக ஆந்திர மாநிலம் புட்டபர்த்தியில் இருந்து விமானம் மூலம் கோவை விமான நிலையத்திற்கு மோடி வந்தடைந்தார். அங்கு அவருக்கு தமிழக கவர்னர் ஆர்.என்.ரவி மற்றும் அரசு அதிகாரிகள் வரவேற்பு அளித்தனர். தமிழக அரசு சார்பில் அமைச்சர் சுவாமிநாதன் பிரதமர் மோடியை வரவேற்றார்.

பின்னர் அவர் அங்கிருந்து கார் மூலம் மாநாடு நடைபெறும் கொடிசியா வளாகத்துக்கு வந்தார். அப்போது வழிநெடுக பாஜக தொண்டர்கள், பொதுமக்கள் பிரதமர் மோடிக்கு உற்சாக வரவேற்பு அளித்தனர். இதனைத்தொடர்ந்து தென்னிந்திய இயற்கை விவசாயிகள் கூட்டமைப்பு சார்பில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

இந்நிலையில் கோவை விமான நிலையத்தில் பிரதமர் மோடிக்கு அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி, த.மா.கா. தலைவர் ஜி.கே.வாசன் மற்றும் கூட்டணி கட்சி தலைவர்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

# ஆம்ஸ்ட்ராங் கொலை வழக்கில் சி.பி.ஐ. விசாரணைக்கு தடை

### உச்ச நீதிமன்றம் அதிரடி உத்தரவு

புதுடெல்லி, நவ.20: பகுஜன் சமாஜ் கட்சி மாநிலத் தலைவராக இருந்த ஆம்ஸ்ட்ராங் கடந்த ஆண்டு ஜூலை 5-ந்தேதி அவருடைய வீட்டிற்கு அருகே மர்ம நபர்களால் வெட்டி படுகொலை செய்யப்பட்டார்.

இதுகுறித்து செம்பியம் போலீசார் வழக்குப்பதிவு செய்து ரவுடி நாகேந்திரன், அவரது மகன் அஸ்வத்தாமன், பொன்னை பாலு உள்பட 27 பேரை கைது செய்தனர். அதில் ரவுடி திருவேங்கடம் போலீஸ் என்கவுன்ட்டரில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

ஆம்ஸ்ட்ராங் கொலை வழக்கில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக தமிழ்நாடு அரசு வாதம் முன்வைத்தது.

இதனை ஏற்றுக்கொண்ட உச்ச நீதிமன்றம் சிபிஐ விசாரணைக்கு மாற்றிய ஐகோர்ட் உத்தரவுக்கு தடை விதித்தது.

மேலும், ஒவ்வொரு வழக்கிலும் சிபிஐ விசாரணை நடத்த வேண்டும் என உத்தரவிடக் கோருவதை ஏற்க முடியாது என்று உச்ச நீதிமன்றம் கருத்து தெரிவித்தது.

# பீகார் முதல்-மந்திரியாக இன்று பதவியேற்கிறார் நிதிஷ் குமார்

பாட்னா, நவ.20: நடந்து முடிந்த பீகார் சட்டசபை தேர்தலில் பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி 202 தொகுதிகளில் அமோக வெற்றி பெற்று ஆட்சியை தக்கவைத்துக் கொண்டது. மொத்தம் உள்ள 243 தொகுதிகளில் இந்தியா கூட்டணியால் வெறும் 35 தொகுதிகளிலேயே வெற்றி பெற முடிந்தது.

தேசிய ஜனநாயக கூட்டணியில் பா.ஜ.க. 101 தொகுதிகளில் போட்டியிட்டு 89 இடங்களில் வெற்றி வாகை சூடியுள்ளது. அதே கூட்டணியில் உள்ள ஐக்கிய ஜனதா தளம் 101 தொகுதிகளில்



களம் கண்டு 85 இடங்களில் வெற்றிக்கனியை பறித்துள்ளது.

கடந்த முறை (2020) போலவே இந்த முறையும் நிதிஷ்குமாரே முதல்-மந்திரியாக பதவியேற்க இருக்கிறார். அதற்காக, தனது பதவியை ராஜினாமா செய்துள்ள அவர், மீண்டும் வரும் 20-ந்தேதி (நாளை) முதல்-மந்திரியாக பதவியேற்க இருக்கிறார்.

இதன் மூலம் பீகார் முதல்-மந்திரியாக நிதிஷ்குமார் 10-வது தடவையாக பதவியேற்க உள்ளார்.

அவரது பதவியேற்பு விழா பாட்னாவில் உள்ள காந்தி மைதானத்தில் நாளை நடைபெற உள்ளது.

விழாவில் பிரதமர் மோடி, மத்திய மந்திரிகள், பா.ஜனதா கூட்டணி முதல்-மந்திரிகள், கூட்டணி கட்சிகளின் தலைவர்கள் ஆகியோர் கலந்து கொள்கிறார்கள். பிரதமர் பங்கேற்பதால், காந்தி மைதானம், பாதுகாப்பு படையினரின் கட்டுப்பாட்டில் கொண்டுவரப்பட்டுள்ளது.

# ஆந்திரா: போலீசார் அதிரடி சோதனை 50 மாவோயிஸ்டுகள் கைது



அமராவதி, நவ.20: சத்தீஷ்கார், மராட்டியம், ஜார்க்கண்ட், ஒடிசா, மத்தியபிரதேசம், ஆந்திரா உள்பட பல்வேறு மாநிலங்களில் நக்சலைட்டுகள், மாவோயிஸ்டுகள் ஆதிக்கம் உள்ளது.

நக்சலைட்டுகள், மாவோயிஸ்டுகளை ஒடுக்கும் நடவடிக்கையில் மாநில சிறப்பு போலீஸ் படையுடன், மத்திய பாதுகாப்புப்படையினர் ஈடுபட்டு வருகின்றனர். அடுத்த ஆண்டு மார்ச் 31ம் தேதிக்குள் நாட்டில் நக்சலைட்டுகள், மாவோயிஸ்டுகளை முழுவதும் ஒழிக்க மத்திய அரசு காலக்கெடு நிர்ணயித்துள்ளது. இதையடுத்து, மாவோயிஸ்டுகள், நக்சலைட்டுகள் சுட்டுக்கொல்லப்பட்டோ, சரண் அடைந்தோ வருகின்றனர்.

இதனிடையே, ஆந்திர மாநிலம் அல்லுரி சீதா ராமராஜு மாவட்டம் மாரேடுமில்லி மண்டலம் வனப்பகுதியில் நேற்று போலீசார் நடத்திய என்கவுன்டரில் 6 மாவோயிஸ்டுகள் சுட்டுக்கொல்லப்பட்டனர். இதில் மாவோயிஸ்டு முக்கிய தளபதி மாட்வி ஹிட்மாவும் அடக்கம்.

இந்நிலையில், மாவோயிஸ்டுகள் என்கவுன்டரை தொடர்ந்து ஆந்திராவில் 5 மாவட்டங்களில் போலீசார் இன்று அதிரடி சோதனை நடத்தினர்.

இந்த சோதனையில் பெண்கள் உள்பட 50 மாவோயிஸ்டுகள் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்ட மாவோயிஸ்டுகளிடமிருந்து துப்பாக்கிகள், தோட்டாக்கள், வெடிபொருட்கள், ரூ. 13 லட்சம் பணம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்ட மாவோயிஸ்டுகளிடம் விசாரணை நடைபெற்று வருகிறது.







# திருப்பூர் கலெக்டர் அலுவலகத்திற்கு வெடிகுண்டு மிரட்டல்



## போலீசார் தீவிர சோதனை

**திருப்பூர், நவ.20:**

திருப்பூர் பல்லடம் சாலையில் மாவட்ட கலெக்டர் அலுவலகம் உள்ளது. இது 7 தளங்களை கொண்டது. கலெக்டர், வருவாய் அலுவலர் உள்பட அதிகாரிகளின் அலுவல் அறைகள் மற்றும் பல்வேறு துறை அலுவலகங்களும் செயல்பட்டு வருகின்றன.

இந்நிலையில் மாவட்ட கலெக்டரின் அதிகாரபூர்வ மின்னஞ்சலுக்கு, அறிமுகம் இல்லாத முகவரியில் இருந்து இன்று காலை ஒரு மெயில் வந்துள்ளது. அதில் திருப்பூர் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் வெடிகுண்டு வெடிக்கும் என குறிப்பிடப்பட்டு இருந்தது.

இதையடுத்து கலெக்டர் மணிஷ் நாரணவரே, மாநகர போலீஸ் கமிஷனர் ராஜேந்திரனுக்கு தகவல் அளித்தார். இதையடுத்து மாநகர நுண்ணறிவு பிரிவு போலீசார் மற்றும் வெடிகுண்டை கண்டறியும் போலீசார் குழு மோப்பநாய், புல்லட் உதவியுடன் கலெக்டர் அலுவலகத்தின் பல்வேறு தளங்களிலும் ஆய்வு செய்தனர்.

கலெக்டர் அலுவலகத்தின் 7 தளங்களிலும் உள்ள அலுவலக அறைகள், கழிவறைகள் மற்றும் வளாகத்தில் நிறுத்தப்பட்டிருந்த வாகனங்கள் உள்ளிட்ட இடங்களில் ஆய்வு செய்தனர். சோதனையில் வெடிகுண்டு எதுவும் கைப்பற்றப்படவில்லை. மேலும் மின்னஞ்சல் அனுப்பிய முகவரி தொடர்பாக போலீசார் தொடர்ந்து விசாரணையில் ஈடுபட்டுள்ளனர்.

எப்போதும் பரபரப்பாக காணப்படும் கலெக்டர் அலுவலகத்தில் இன்று காலை வெடிகுண்டு செயல் இழக்கும் நிபுணர்கள் ஒவ்வொரு அறையாக சென்று சோதனை செய்த சம்பவம் அரசு ஊழியர்கள் மற்றும் பொதுமக்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

# அன்பான மகள் வந்தாள்.. பெண் குழந்தைக்கு தந்தையானார் பிரேம்ஜி



**சென்னை, நவ.20:**

தமிழ் சினிமாவில் நகைச்சுவை மற்றும் குணச்சித்திர கதாப்பாத்திரங்களில் நடிப்பவர் நடிகர் பிரேம்ஜி. இவர் கடந்த ஆண்டு ஜூன் மாதம் இந்து என்பவரை காதலித்து திருமணம் செய்து கொண்டார்.

இந்த தம்பதிக்கு இன்று பெண் குழந்தை பிறந்துள்ளது. இந்த மகிழ்ச்சியான தகவலை 'வல்லமை' பட இயக்குநர் கருப்பையா தனது சமூக வலைதளத்தில் பகிர்ந்துள்ளார். திரைப்பிரபலங்கள் மற்றும் ரசிகர்கள் பலரும் பிரேம்ஜிக்கு வாழ்த்துகளைத் தெரிவித்து வருகின்றனர்.

47 வயதில் பிரேம்ஜி தந்தையாகியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# காங்கிரசிஸ் சேர விஜய் முயற்சி: ஜோதிமணி எம்.பி.



**கரூர், நவ.20:**

கரூர் பாராளுமன்ற தொகுதி காங்கிரஸ் எம்.பி.ஜோதிமணி கரூரில் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:-

சமூக வலைதளங்கள் காங்கிரஸ்- தமிழக வெற்றி கழகத்துடன் கூட்டணி அமைக்க உள்ளதாக ஆதாரமற்ற தகவல்களை வெளியிடுகின்றன.

ஆனால் காங்கிரசுக்கு விஜய் அறிமுகம் இல்லாதவர் அல்ல. காங்கிரஸில் சேருவது குறித்து விவாதிக்க 2010 ல் அவர் ராகுல் காந்தியை சந்தித்தார். ஆனால் பல்வேறு காரணங்களால் அது நடக்கவில்லை.

கரூர் துயர சம்பவத்தின் போது மற்ற காங்கிரஸ் தலைவர்களை போலவே விஜய்யிடம் ராகுல் காந்தி பேசினார்.

சமூக ஊடகங்களில் நாம் பார்ப்பதை அடிப்படையாகக் கொண்டு கூட்டணிகளை முடிவுக்கு கொண்டு வர முடியாது. நாங்கள் ஏற்கனவே திமுக கூட்டணியில் உறுதியாக இருக்கிறோம். கூட்டணி விஷயங்களை பற்றி விவாதிக்க இன்னும் நேரம் இருக்கிறது.


தற்போது நடைபெற்று வரும் எஸ்.ஐ.ஆர் என்பது வாக்காளர் பட்டியல் தீவிர திருத்தம் கிடையாது. குடியுரிமை திருத்தம்.

பா.ஜ.க. ஆளும் அசாம் மாநிலத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் செய்யாமல் வாக்காளர் பட்டியல் திருத்தம் மட்டும் செய்கின்றனர். இதற்கு அஸ்ஸாமில் நடத்தப்பட்ட தேசிய குடிமக்கள் பதிவேடு தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளது என்று கூறுகின்றனர்.

இதுபோல எஸ்.ஐ.ஆர் வழக்கும் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள நிலையில் பா.ஜ.க. ஆட்சி பொறுப்பில் இல்லாத தமிழகம், கேரளாவில் எஸ்.ஐ.ஆர் செயல்படுத்துவதன் நோக்கம் என்ன? தேர்தல் ஆணையம் பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில் ஒரு நிலைப்பாடும் பா.ஜ.க. ஆளாத மாநிலங்களில் வேறு ஒரு நிலைப்பாடும் என இரட்டை நிலைபாடுகளுடன் செயல்படுகிறது. பா.ஜ.க.வின் ஒரு அணி போல தான் தேர்தல் ஆணையம் செயல்படுகிறது என்றார்.

# மீனாட்சி அம்மன் கோவிலில் பிரசாத பொருட்கள் திடீர் விலையேற்றம்

## பக்தர்கள் அதிர்ச்சி



**மதுரை, நவ.20:**

உலகப் புகழ்பெற்ற அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் கோவிலுக்கு நாள்தோறும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் உள்நாட்டில் இருந்தும் வெளிநாட்டில் இருந்தும் வந்து செல்கின்றனர். தற்போது கார்த்திகை மாதம் என்பதால் தென் மாநிலங்களைச் சேர்ந்த ஐயப்ப பக்தர்கள் கோவிலுக்கு அதிகளவில் வருகை தருகின்றனர்.

இந்து சமய அறநிலையத்துறை மற்றும் கோவில் நிர்வாகம் சார்பில் பக்தர்களுக்கு விற்பனை செய்யப்பட்டு வரும் சர்க்கரைப் பொங்கல், புளியோதரை, வடை, அப்பம், முறுக்கு, லட்டு, அதிரசம் ஆகியவற்றின் விலை கடந்த 2011-ம் வருடத்தில் இருந்து ரூ.10லிருந்து ரூ.15 ஆக விற்பனை செய்யப்பட்டு வந்தது.

இந்த நிலையில் 15 ஆண்டுகளுக்குப் பிறகு தற்போது முதல் முறையாக பிரசாத பொருட்களுக்கு விலை உயர்த்தப்பட்டுள்ளது. கோவில் நிர்வாகம் சார்பாக எந்த ஒரு முன்னறிவிப்பும் இல்லாமல் செய்யப்பட்ட இந்த விலையேற்றம் பக்தர்களிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

குறிப்பாக 175 கிராம் சர்க்கரை பொங்கல், 150 கிராம் புளியோதரை, 140 கிராம் வடை, 50 கிராம் அப்பம், 40 கிராம் தேன்குழல் முறுக்கு, 60 கிராம் லட்டு இவை யாவும் தற்போது 15 ரூபாய் என விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

கடந்த 2011 முதல் 15 ஆண்டுகளாக 10 ரூபாய்க்கு மட்டுமே விற்கப்பட்டு வந்த இந்த பிரசாதங்கள் தற்போது 50 சதவீதம் விலை ஏற்றம் கண்டுள்ளது. மூலப்பொருட்களின் விலை ஏற்றம் காரணமாக இந்த விலையேற்றம் உள்ளதாக கோவில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

8 கிராம் குங்குமம் 3 ரூபாய்க்கும், 40 கிராம் குங்குமம் 15 ரூபாய்க்கும், 100 கிராம் குங்குமம் 35 ரூபாய்க்கும் தற்போது விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

கோவில் வளாகத்திற்குள் பொற்றாமரை குளம் பகுதியில் 2 பிரசாத கடைகளும், அம்மன் சன்னதி, முக்குறுணி விநாயகர் ஆலயம், கொடிமரம் அருகே என மொத்தம் 6 பிரசாத ஸ்டால்கள் உள்ளன. கோவிலுக்கு வெளியே கிழக்கு கோபுரம் அருகில் ஒரு பிரசாத ஸ்டால் என 7 பிரசாத ஸ்டால்கள் கோவில் நிர்வாகத்தின் கட்டுப்பாட்டில் உள்ளது.

பக்தர்களுக்கு விற்பனை செய்யக்கூடிய இந்த பிரசாதங்களின் விலை ஏற்றம் பக்தர்களிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

மஞ்சள் பை 21 ரூபாய்க்கு விற்கப்பட்டு வந்த நிலையில் அது மட்டும் ரூபாய் 15 ஆக விலை குறைக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# பெண்களுக்கெதிரான தி.மு.க. ஆட்சி விரைவில் ஒழிய வேண்டும் !

## நயினார் நாகேந்திரன்



**சென்னை, நவ.20:**


பா.ஜ.க. மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் எக்ஸ் தள பக்கத்தில் 'பெண்களுக்கெதிரான தி.மு.க. ஆட்சி விரைவில் ஒழிய வேண்டும்!' என்ற தலைப்பில் வெளியிட்டுள்ள பதிவில்,

இராமேஸ்வரத்தில் காதலிக்க மறுத்த 12-ஆம் வகுப்பு மாணவியைப் பள்ளி செல்லும் வழியில் மறித்து இளைஞர் ஒருவர் கத்தியால் குத்தி படுகொலை செய்துள்ள சம்பவம் கடும் அதிர்ச்சியளிப்பதோடு, மிகுந்த மன வேதனையுமளிக்கிறது. கொலையான மாணவியின் குடும்பத்தாருக்கு எனது ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, இந்த மீளாத் துயரைக் கடந்து வர இறைவன் அவர்களுக்குத் துணைநிற்க வேண்டுமெனப் பிரார்த்தித்துக் கொள்கிறேன்.

ஒவ்வொரு நாள் விடியும் பொழுதும் இன்று எந்தப் பெண்ணுக்கு எங்கே வன்கொடுமை நடந்துள்ளதோ என்ற பதற்றத்திலேயே செய்தித்தாள்களைப் பிரிக்க வேண்டியிருக்கிறது. இத்தனை ஆயிரம் காவல்துறையினர் இருந்தும் கூட நமது வீட்டுப் பிள்ளைகளை நாம் பொத்திப் பொத்திப் பாதுகாக்க வேண்டியிருக்கிறது. கைதுகள் தான் அதிகரிக்கிறதே தவிர திமுக ஆட்சியில் பெண்களுக்கெதிரான குற்றங்கள் குறைந்தபாடில்லை.

கடந்த நான்கரை ஆண்டுகளாகப் பெண்களின் பாதுகாப்பைப் பலப்படுத்தக் கூறி பாஜக பல போராட்டங்களையும், ஆர்ப்பாட்டங்களையும் முன்னெடுத்து வருகிறது, கண்டன அறிக்கைகளை வெளியிட்டு வருகிறது. ஆனால், தன் வாரிசுகளை மட்டுமே உயர்ந்ததாக நினைக்கும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நம் பிள்ளைகளைத் தொடர்ந்து பலிகொடுக்கத் தயாராகிவிட்டார். இப்படிப்பட்ட ஒரு கேடுகெட்ட ஆட்சி இனியும் தமிழகத்தில் தொடரக்கூடாது! திமுகவின் இந்த காட்டாட்சிக்கு நமது தேசிய ஜனநாயகக் கூட்டணி கூடிய விரைவில் கடிவாளமிடும்! என்று கூறியுள்ளார்.

# தி.மு.க. ஆட்சியில் சமூக விரோதிகளைத் தவிர யாருக்கும் பாதுகாப்பில்லை! - அன்புமணி



**சென்னை, நவ.20:**

பா.ம.க. தலைவர் அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில்,

இராமநாதபுரம் மாவட்டம் இராமேஸ்வரத்தில் காதலிக்க மறுத்த 12-ஆம் வகுப்பு மாணவி ஷாலினி அதே பகுதியைச் சேர்ந்த முனியராஜ் என்ற மனித மிருகத்தால் கொடூரமான முறையில் கத்தியால் குத்தி படுகொலை செய்யப்பட்டிருக்கிறார். மாணவி ஷாலினியை இழந்து வாடும் குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இராமேஸ்வரத்தை அடுத்த சேராங்கோட்டையைச் சேர்ந்த மாணவி ஷாலினியை அதே பகுதியைச் சேர்ந்த முனியராஜ் என்பவர் தம்மை காதலிக்கும்படி தொடர்ந்து தொல்லை கொடுத்து வந்திருக்கிறார். ஆனால், அவரைக் காதலிக்க ஷாலினி மறுத்து விட்டதால் ஆத்திரமடைந்த முனியராஜ், இன்று காலை மாணவி ஷாலினி பள்ளிக்கு செல்லும் வழியில் மறித்து கத்தியால் குத்தி படுகொலை செய்திருக்கிறார்.

பள்ளி செல்லும் மாணவிகளும், அலுவலகம் செல்லும் இளம்பெண்களும் தொடர்ந்து பாலியல் சீண்டல்களுக்கு ஆளாவதாலும், காதல் தொல்லைகளுக்கு உட்படுத்தப்படுவதாலும் பள்ளி மற்றும் அலுவலக நேரங்களில் பேருந்து நிறுத்தங்களிலும், பள்ளிகள் மற்றும் அலுவலகங்கள் அமைந்துள்ள பகுதிகளிலும் காவல்துறை பாதுகாப்புக்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று பாட்டாளி மக்கள் கட்சி தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. அதை செவிமடுக்க திமுக அரசு தவறியதன் விளைவாகத் தான் ஓர் அப்பாவி மாணவி கொடூரமாக படுகொலை செய்யப்பட்டுள்ளார். இதற்கு திமுக அரசு தான் பொறுப்பேற்க வேண்டும்.

திமுக ஆட்சிக்கு வந்த நாளில் இருந்தே பெண்கள், குழந்தைகள் உள்ளிட்ட எவருக்கு பாதுகாப்பில்லாத நிலை தான் நிலவி வருகிறது. ஆளுங்கட்சியினருக்கு துணை போகும் சமூக விரோதிகள் மட்டும் தான் இந்த ஆட்சியில் மிகவும் பாதுகாப்பாக இருக்கின்றனர். திமுக ஆட்சியில் எத்தகைய கொடூர குற்றங்களை செய்தாலும் தப்பி விடலாம் என்ற துணிச்சல் தான் இத்தகைய கொலைகளுக்கு காரணம் ஆகும்.

திமுக ஆட்சிக்கு வந்த பின்னர் 2021, 2022, 2023 ஆகிய 3 ஆண்டுகளில் மட்டும் மொத்தம் 217 குழந்தைகள் படுகொலை செய்யப்பட்டிருக்கின்றனர்; அவர்களில் 7 குழந்தைகள் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளனர். அதேபோல், திமுக ஆட்சியில் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் 60.66 விழுக்காடும், போக்சோ வழக்குகளின் எண்ணிக்கை 52.30 விழுக்காடும் அதிகரித்துள்ளன. இது தான் திமுக ஆட்சியின் சாதனை ஆகும்.

இராமேஸ்வரத்தில் மாணவி ஷாலினியை கொடூரமாக படுகொலை செய்த முனியராஜை சட்டத்தின் முன் நிறுத்தி கடுமையான தண்டனை பெற்றுத் தர வேண்டும். மாணவி ஷாலினியின் குடும்பத்திற்கு ரூ.25 லட்சம் இழப்பீடு வழங்க வேண்டும். திமுக ஆட்சியின் எஞ்சியுள்ள சில வாரங்களிலாவது பெண்களும், குழந்தைகளும் பாதுகாப்பாக நடமாடும் சூழலை உருவாக்க வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# தமிழக வெற்றிக்கழகம் விரும்பினால் எடப்பாடி பழனிசாமி பேச்சுவார்த்தை நடத்துவார்- ராஜேந்திர பாலாஜி



**நெல்லை, நவ.20:**

கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் நினைவு தினத்தை முன்னிட்டு நெல்லை வர்த்தக மையத்தில் வெள்ளாளர் முன்னேற்ற கழகத்தின் சார்பில் நடந்த மாநாட்டில் அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் ராஜேந்திர பாலாஜி சிறப்பு அழைப்பாளராக பங்கேற்றார்.

பின்னர் அவர் நிருபர்களை சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது:-

தேசிய ஜனநாயக கூட்டணியின் தமிழக தலைவரான எடப்பாடி பழனிசாமி தான் முடிவுகளை எடுப்பார். பா.ஜ.க. மற்றும் தோழமை கட்சிகளின் ஆதரவுடன் சட்டமன்ற தேர்தலில் 220-க்கும் மேற்பட்ட தொகுதிகளில் அ.தி.மு.க. வெற்றி பெறும். சமூக, சமுதாய அரசியல் அமைப்புகளும் அ.தி.மு.க.விற்கு ஆதரவு அளித்து வருகின்றன.

தமிழக வெற்றிக்கழகம் விரும்பினால் அவர்களுடன் அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி பேசுவார். தி.மு.க.வை ஆட்சியில் இருந்து அகற்ற நினைக்கும் கட்சிகள் அனைத்தையும் ஒன்றிணைக்கும் பணிகளை எடப்பாடி பழனிசாமி மேற்கொள்வார். தி.மு.க. வேண்டாம் என்று மக்கள் முடிவு செய்துவிட்டனர். அரசியல் கட்சி தலைவர்களும் அதி.மு.க. ஆட்சி மீண்டும் அமைய வேண்டும் என எதிர்பார்க்கின்றனர்.

இரட்டை வாக்களர்கள், போலி வாக்காளர்களை நீக்கும் பணியை தேர்தல் ஆணையம் எஸ்.ஐ.ஆர். மூலம் செய்கிறது. இந்த பணியை எடப்பாடி பழனிசாமி வரவேற்கிறார். பீகார் தேர்தல் முடிவு தான் தமிழகத்திலும் வரும். அ.தி.மு.க. கூட்டணி வெற்றி பெற்று எடப்பாடி பழனிசாமி மீண்டும் முதலமைச்சராவார்.

பா.ஜ.க. தேசத்தை பாதுகாப்பதாக உள்ளது. தேச பக்தராக அ.தி.மு.க. உள்ளது. தேசத்தை பாதுகாக்கும் பா.ஜ.க.வோடு தேச பக்தரான அ.தி.மு.க. கூட்டணி வைத்துள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

# கோவையில் 24-ந் தேதி ம.தி.மு.க ஆர்ப்பாட்டம்

## வைகோ



**கோவை, நவ.20:**

ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ கோவையில் நேற்று நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அவர் கூறியதாவது:-

கோவை மெட்ரோ ரெயில் திட்டம் என்பது முன்பே அறிவிக்கப்பட்டது. தமிழக அரசும் மெட்ரோ ரெயில் திட்டத்துக்கு அறிக்கை தயாரித்து அனுப்பியது. அவர்கள் கேட்ட கேள்விகளுக்கும் தமிழக அரசு பதில் அளித்தது.

இந்த நிலையில் திடீரென நேற்று மாலை கோவை, மதுரை மெட்ரோ ரெயில் திட்டத்தை மத்திய அரசு நிராகரித்து இருக்கிறது.

20 லட்சத்திற்கு குறைவாக இருப்பதால் அனுமதி கொடுக்க இயலாது என கூறி ரத்து செய்திருக்கிறது. ஆனால் மக்கள் தொகை குறைவாக உள்ள ஆக்ரா, போபால், கொச்சி உள்ளிட்ட பகுதிகளில் மெட்ரோ ரெயில் திட்டத்திற்கு அனுமதி அளித்து அங்கு பணிகள் தொடங்கி விட்டன.

ஆனால் மக்கள் தொகையை காரணம் காட்டி, கோவை மெட்ரோ ரெயில் திட்டத்தை ரத்து செய்தது அதிர்ச்சி அளிக்கிறது. இது தமிழகத்திற்கு எதிரானது. மெட்ரோ ரெயில் திட்டத்தை ரத்து செய்து, மத்திய அரசு தமிழகத்திற்கு துரோகம், வஞ்சம் செய்துள்ளது.

கோவை மெட்ரோ ரெயில் திட்டத்தை ரத்து செய்த மத்திய அரசை கண்டித்தும், மெட்ரோ ரெயில் திட்டம் மீண்டும் செயல்படுத்த கோரியும் வருகிற 24-ந் தேதி(திங்கட்கிழமை) மாலை 4 மணிக்கு கோவை செஞ்சிலுவை சங்கம் முன்பு ம.தி.மு.க சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப்படும்.

தேர்தல் ஆணையம் கொண்டு வந்துள்ள எஸ்.ஐ.ஆர் பணி மிகப்பெரிய ஜனநாயக மோசடியாகும். தேர்தல் ஆணையம் ஒருசாராகவே செயல்பட்டு வருகிறது. எஸ்.ஐ.ஆர். பணிகளை உடனே நிறுத்த வேண்டும்.

தமிழகத்தில் உள்ள கோவை, மதுரை மெட்ரோ ரெயில் திட்டத்தை ரத்து செய்துவிட்டு, பிரதமர் மோடி தமிழகத்தில் வந்து திருக்குறளையும், பாரதியார் பாட்டையும் மனப்பாடம் செய்து படித்து தமிழக மக்களை ஏமாற்ற முடியாது. அதனை தமிழக மக்கள் யாரும் நம்பமாட்டார்கள் என்றார்.

## தூத்துக்குடியில்

# மரத்தின் மீது கார் மோதிய விபத்தில் 3 பேர் உயிரிழப்பு



**தூத்துக்குடி, நவ.20:**

தூத்துக்குடி கடற்கரை சாலையில் மரத்தின் மீது கார் மோதிய விபத்தில் 3 பயிற்சி மருத்துவ மாணவர்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர்.

கார் மரத்தில் மோதியதில் அதில் பயணம் செய்த மருத்துவ மாணவர்களான சாருபன், ராகுல் செபஸ்டியன், முகிலன் ஆகியோர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தனர். விபத்தில் உயிரிழந்தவர்கள் தூத்துக்குடி அரசு மருத்துவ கல்லூரியில் 4-ம் ஆண்டு பயின்று வரும் மாணவர்கள் ஆவர்.மேலும் விபத்தில் படுகாயமடைந்த கிருத்திக் குமார், சரண் ஆகியோர் மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். விபத்து குறித்து போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## நம் வாசவி அம்மன் சிறப்பு அலங்காரத்தில்....



திருவள்ளூர் நவம்பர் -19 ஸ்ரீ வாசவி கன்யகாபரமேஸ்வரி அம்மன் இன்றைய அலங்காரத்தில் இன்று அமாவாசை பூஜையில் வண்ணமலர் மாலைகளுடன், மயிலிறகு மாலையுடன், பிரசாதம், நெய்வேத்தியங்களுடன், சிறப்பு அலங்காரத்தில் நம் வாசவி அம்மன் அருள் பாலிக்கும் காட்சி.

## அமாவாசை பூஜையில் நம் வாசவி......



ஈரோடு நவம்பர் -19 ஸ்ரீ வாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் இன்று அமாவாசை பூஜையில் வண்ண மலர் மாலைகளால் அலங்கரிக்கப்பட்டு, பிரசாதம், நெய்வேத்தியங்களுடன், வெள்ளி கவசத்தில் நம் அன்னை வாசவி சிறப்பு அலங்காரத்தில் அருள் பாலிக்கும் காட்சி.

### அ.தி.மு.க.வினருடன் தொடர்பு:

## சுல்தான்பேட்டை தி.மு.க. ஒன்றிய செயலாளர் பதவி பறிப்பு

**சென்னை, நவ.20:** தி.மு.க. தலைவரும், முதல்-அமைச்சருமான மு.க.ஸ்டாலின், உடன்பிறப்பே வா என்ற தலைப்பில் சட்டமன்ற தொகுதி வாரியாக கட்சி நிர்வாகிகளை சந்தித்து வருகிறார்.

அந்த வகையில், வால்பாறை, கிணத்துக்கடவு மற்றும் சூலூர் சட்டமன்ற தொகுதி நிர்வாகிகளை நேற்று சந்தித்த நிலையில், இன்று ஒட்டப்பிடாரம், ஆலங்குளம், கன்னியாகுமரி சட்டமன்ற தொகுதி நிர்வாகிகளை முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் சந்தித்து பேசினார்.

இந்த சந்திப்பின்போது, சட்டமன்ற தேர்தலில் வெற்றி வாய்ப்பு எப்படி இருக்கிறது என்பதை ஆராய்ந்தார்.

இந்த நிலையில், கோவை மாவட்டம் சுல்தான்பேட்டை மேற்கு ஒன்றிய செயலாளர் பி.வி.மகாலிங்கம் அ.தி.மு.க.வினருடன் தொடர்பில் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. அவரை பதவியில் இருந்து நீக்குவதாக கட்சியின் பொதுச் செயலாளர் துரைமுருகன் அறிவித்துள்ளார்.

அவருக்கு பதிலாக சுல்தான்பேட்டை மேற்கு ஒன்றிய செயலாளராக ஆர்.ரமேஷ் நியமிக்கப்பட்டுள்ளார்.






## கார்த்திகை மாதம் சோமவார,தேய்பிறை பிரதோஷத்தை முன்னிட்டு அண்ணாமலையார் ஆலயத்தில் அமைந்திருக்கும் பெரிய நந்திகேச பெருமானுக்கு சிறப்பு வழிபாடு...





அண்ணாமலையார் ஆலயத்தில் அமைந்திருக்கும் பெரிய நந்திகேச பெருமானுக்கு சிறப்பு அபிஷேகம், பால்,தயிர், இளநீர், பன்னீர், சந்தனம், தேன்,பஞ்சாமிர்தம், வெட்டிவேர் எண்ணற்ற வாசனை திரவியங்களைக் கொண்டு அபிஷேகங்கள், வண்ணமலர் மாலைகளால் அலங்காரங்கள், பிரசாதம், நெய்வேத்தியங்களுடன், சங்குகள் முழங்க, வேத மந்திரங்கள் ஒலிக்க, மங்கள வாத்தியங்கள் இசைக்க, பாட்டுகள் பாடி மஹா தீபாராதனையும் நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் பெரிய நந்திகேசபெருமானை வேண்டி அருள் பெற்றனர்.

### இளையான்குடி பேரூராட்சி கூட்டத்தில்

## குடிநீர் திட்டத்தை விரைவில் செயல்படுத்த கவுன்சிலர்கள் கோரிக்கை

**சிவகங்கை, நவ.20:** சிவகங்கை மாவட்டம் இளையான்குடியில் நடைபெற்ற பேரூராட்சி கூட்டத்தில் புதிய குடி நீர் திட்டத்தை விரைந்து முடிக்க வேண்டுமென கவுன்சிலர்கள் வேண்டு கோள் விடுத்தனர். இளையான்குடி பேரூராட்சி கூட்டம் தலைவர் நஜமுதீன் தலைமையில் நடந்தது துணைத்தலைவர் இப்ராஹிம் வரவேற்றார். செயல் அலுவலர் அன் னலட்சுமி வரவேற்றார்.





பேரூராட்சி அலுவலர் சுந் தரவள்ளி தீர்மானங்களை வாசித்தார். கூட்டத்தில் கவுன்சிலர்கள் பேசியதாவது செய்யது ஜமீமா தி.மு.க.,கவுன்சிலர் அம்ருத் திட்டத்தால் சேதமடைந்த சாலைகளைசரிசெய்ய வேண்டும் கச்சாத்த நல்லூரில் பேச்சுவார்த்தை செய்து கிணறு அமைத்து வைகை குடிநீர் கொண்டு வர ஏற்பாடு செய்ய வேண்டியும் மழைக்காலம் அதனால் சாக்கடைகளை தூர்வாரி கொசு மருந்து அடிக்கும் படியும் இளையான்குடி குப்பை கிடங்கு இடம் மாற்றம் செய்வது குறித்தும் இளையான்குடி குடிநீர் தொட்டிக்கு சுற்றுச்சுவர் வேலி அமைத்து நிரந்தர காவலர் நியமிக்கவேண்டும். கண்காணிப்பு கேமரா அமைக்க வேண்டும். அதிமுக கவுன்சிலர் நாகூர் மீரா அம்ருத் 2.0 வைகை கூட்டுக் குடிநீர் திட்டம் 28 கோடி மதிப்பீட்டில் டென்டர் விடப்பட்டு இளையான்குடி முழுவதும் ரோடுகள் தோண்டப்பட்டு பைப்லைன் போடப்பட்டுள்ளது இதற்காக அனைத்து ரோடுகளும் சேதப்படுத்தப்பட்டுள்ளது ஆனால் இந்த குடிநீர் திட்டத்திற்கு முக்கியமாக முதன்மைப்பணியாக செய்ய வேண்டிய கினறு தோண்டும் பணி இன்னும் நடைபெறாமல் கிடப்பில் போடப்பட்டுள்ளது பிரதான மெயின் பைப்லைன் இன்னும் போடப்படவில்லை பேரூராட்சி நிர்வாகம் திட்டத்தை முடக்கும் நோக்கத்தில் மெத்தனமாக செயல்படுகிறது எனவே மாவட்ட ஆட்சியரை தலைவர் கவுன்சிலர்கள் உடனடியாக சந்தித்து திட்டத்தை விரைந்து செயல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். அனைத்து கவுன்சிலர்களும் திங்கட்கிழமை மாவட்ட ஆட்சியரை சந்தித்து வலியுறுத்துவோம் என துணைத் தலைவர் இப்ராஹீம் தெரிவித்தார்.

அனைத்து வார்டுகளில் உடனுக்குடன் சுகாதார பணிகள் நடைபெற்று வருகிறது. கொசு மருந்து தொடர்ந்து அடிக்கப்படும் என சுகாதார ஆய்வாளர் தங்கதுரை பேசினார். அதை தொடர்ந்து கவுன்சிலர்கள் விரைவில் குடிநீர் திட்டப்பணிகளை முடிக்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர்.

### நெல்லையப்பர் கோவிலில் ஐப்பசி திருக்கல்யாண திருவிழா

## சுவாமி-அம்மன் மறுவீடு பட்டின பிரவேச வீதி உலா

**திருநெல்வேலி, நவ.20:** நெல்லை டவுன் நெல்லையப்பர் கோவிலில் நடைபெறும் பல்வேறு விழாக்களில் ஐப்பசி மாதம் நடைபெறும் திருக்கல்யாண திருவிழா மிகவும் சிறப்பு வாய்ந்ததாகும். கோவிலில் இந்த ஆண்டு ஐப்பசி திருக்கல்யாண விழா கடந்த 4-ந்தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது. விழா நாட்களில் தினமும் சுவாமி, அம்மனுக்கு காலையிலும், இரவிலும் சிறப்பு அபிஷேகம், அலங்கார தீபாராதனை நடந்தது. ஒவ்வொரு நாளும் அம்மன் ஒவ்வொரு வாகனத்தில் வீதி உலா சென்று பக்தர்களுக்கு அருள்பாலித்தார்.



கடந்த 14-ந் தேதி நெல்லை டவுன் காட்சி மண்டபம் அருகே உள்ள கம்பாநதியில் தவம் இருந்த காந்திமதி அம்மனுக்கு சுவாமி நெல்லையப்பர் காட்சி மண்டபத்தில் ரிஷப வாகனத்தில் காட்சி கொடுத்தார்.

15-ந்தேதி அதிகாலையில் அம்மன் சன்னதியில் உள்ள ஆயிரங்கால் மண்டபத்தில் வைத்து சுவாமிக்கும்-அம்மனுக்கும் திருக்கல்யாண வைபவம் நடந்தது. தொடர்ந்து சுவாமி-அம்மன் பூம்பல்லக்கில் பட்டினப்பிரவேசம் வீதி உலா நடந்தது. அதன் பிறகு நேற்று முன்தினம் வரை அம்மன் ஊஞ்சல் திருவிழா நடந்தது.

இந்த நிலையில் திருக்கல்யாணம் வைபவம் நடந்து 5 நாட்களானதால் நேற்று சுவாமி, அம்மன் மறுவீடு பட்டின பிரவேசம் வீதி உலா நடந்தது. இதையொட்டி காலை 9 மணிக்கு சுவாமி, அம்மன் சிறப்பு அலங்காரத்தில் காட்சி அளித்தனர். இதைத் தொடர்ந்து பல்வேறு வகையான பலகாரங்கள் படைத்து சிறப்பு தீபாராதனை நடந்தது.

காலை 10-30 மணிக்கு சுவாமியும், அம்மனும் அலங்கரிக்கப்பட்ட ரிஷப வாகனத்தில் எழுந்தருளி, மேளதாளம் முழங்க மறுவீடு பட்டின பிரவேசம் வீதி உலா நடந்தது. இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். வீதி உலா முடிந்து சுவாமியும் அம்மனும் கோவிலுக்கு வந்தவுடன் சிறப்பு தீபாராதனையுடன் ஐப்பசி திருக்கல்யாண திருவிழா நிறைவு பெற்றது.



## தினம் ஒரு குறள்

**ஒழுக்க முடையவர்க்கு ஒல்லாவே தீய**
**வழுக்கியும் வாயாற் சொலல்.** - குறள் 139

అనుచితంబు జెప్పరాచార పురుములు
మరువు జేతనైనా మాటం మరచి -కురల్ 139


सदाचारयुत लोग तो, मुख से कर भी भूल ।
कहने को असमर्थ हैं, बुरे वचन प्रतिकूल ॥ - कुराल 139

Ozhukka Mutaiyavarkku Ollaave Theeya
Vazhukkiyum Vaayaar Solal - Kural 139

## மதுரை மகாபெரியவா கோவிலில் அனுஷம் வழிபாடு நிகழ்ச்சி

**மதுரை, நவ.20:** கோவில் மாநகரம் என அழைக்கப்படும் மதுரையில் உள்ள ஶ்ரீ மகாபெரியவா கோவிலில் நாளை வியாழக்கிழமை அனுஷ வைபவம் நடைபெறுகிறது. மதுரை எஸ்எஸ் காலணி பொன் மேனி நாராயணன் தெருவில் உள்ள ஶ்ரீ மகாபெரியவா கோவிலில் வியாழன் தோறும் குருவார புஷ்பாஞ்சலி பூஜை நடைபெறும்.

வியாழக்கிழமை குருவாரத்துடன் மகாபெரியவா நட்சத்திர தினமான அனுஷ வைபவம் மகாபெரியவா கோவில் அடுத்து உள்ள எஸ்எம்கே திருமண மண்டத்தில் 20.11.2025 வியாழன், மாலை 5.30 மணி ஸ்ரீ மஹா பெரியவா விக்ரஹம் மற்றும் வெள்ளி பாதுகைக்கு சிறப்பு அபிஷேகம் நடைபெறுகிறது .பக்தர்கள் அபிஷேகப் பொருட்கள் கொண்டு வரலாம். பொய்கைகரைப்பட்டியில் கட்டப்பட்டு வரும் ஸ்ரீ மஹா பெரியவா திருக்கோவில் பணிக்கு ஒரு சதுரடி ரூ. 3500/- வீதம் இந்நிகழ்ச்சியில் வழங்கலாம்.



நிகழ்ச்சிக்கு தங்களின் அருட்கொடை ஏற்றுக்கொள்ளப்படும். என ஸ்ரீ மஹா பெரியவா அனுஷத்தின் அனுகிரகம் நிறுவனர் நெல்லை பாலு, தெரிவித்தார் .பக்த்தர்கள் கீழ் கண்ட நம்பரில் 9442630815 தொடர்பு கொண்டு அருள் ஆசி பெறலாம்.

## காதலிக்க மறுத்த பிளஸ்-2 மாணவி கத்தியால் குத்தி கொலை

**ராமேசுவரம், நவ.20:** ராமநாதபுரம் மாவட்டம் ராமேசுவரத்தை அடுத்த சேராங்கோட்டை பகுதியைச் சேர்ந்தவர் மாரியப்பன். இவர் மீன்பிடி தொழில் செய்து வருகிறார். மாரியப்பனுக்கு 2 மகள்கள் உள்ள நிலையில் மூத்த மகள் ஷாலினி. இவர் ராமேசுவரம் பெண்கள் அரசு மேல்நிலைப்பள்ளியில் பிளஸ்-2 படித்து வருகிறார்.

இந்த நிலையில் அதே பகுதியைச் சேர்ந்த முனிராஜ் (21) என்ற வாலிபர் பள்ளி மாணவியை கடந்த சில நாட்களாக காதலிக்குமாறு வற்புறுத்தி வந்துள்ளார். இதுகுறித்து மாணவி அவரது தந்தை மாரியப்பனிடம் கூறியுள்ளார். இதனையடுத்து முனிராஜ் வீட்டிற்கு சென்ற மாரியப்பன் இளைஞரை கண்டித்துள்ளார்.

இந் நிலையில், இன்று வழக்கம்போல் பள்ளிக்கு சென்ற பிளஸ்-2 மாணவி ஷாலினியை வாலிபர் வழிமறித்து காதலிக்குமாறு மீண்டும் வற்புறுத்தி உள்ளார். ஆனால் மாணவியோ மறுப்பு தெரிவித்துள்ளார். இதனால் ஆத்திரம் அடைந்த முனிராஜ் தான் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து மாணவியை சரமாரியாக குத்தியுள்ளார்.

இதனை சற்று எதிர்பாராத மாணவி நிலைகுலைந்து ரத்த வெள்ளத்தில் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார். இதனையடுத்து முனியராஜன் அங்கிருந்து தப்பி ஓடினார். இந்த கொடூர சம்பவம் குறித்து தகவலறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த துறைமுக போலீசார் மாணவியின் உடலை கைப்பற்றி அரசு மருத்துவமனையில் அனுப்பி வைத்தனர்.

மேலும் மாணவியை கத்தியால் குத்திய வாலிபர் முனிராஜை கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். மாணவியின் உடலை பார்த்து பெற்றோர், உறவினர்கள் கதறி அழுதனர். இது காண்போரை கண் கலங்க செய்தது. காதலிக்க மறுத்த பிளஸ்-2 மாணவி கத்தியால் குத்திக்கொல்லப்பட்ட சம்பவம் ராமேசுவரம் மட்டுமின்றி தமிழகம் முழுவதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.


## விநாயகரை வணங்கி சென்ற காட்டு யானை



வனப்பகுதியில் இருந்து வெளியேறிய காட்டு யானை ஒன்று விநாயகரை வணங்கி சென்ற சம்பவம் நடந்துள்ளது.

## கவிதை அரங்கம்!





நாம் தேடித் தேடி நேசித்த
ஒருவரை ஒரு நாள்
வெறுக்கலாம் ஆனால்
நம்மை தேடித் தேடி
நேசித்த ஒரு வரை ஒரு
நாளும் மறக்க முடியாது

காலம் எந்தத்
காயத்தையும்
ஆற்றுவது இல்லை
அது நம் மனதை
பக்குவபடுத்துகிறது

அவ்வளவு தான்
வழிகள் இன்றி கூட
வாழ்க்கை அமைந்து
விடலாம்
ஆனால் ஒரு போதும்
வலிகள் இல்லாமல்
வாழ்க்கை அமைந்து
விடாது

மகிழ்ச்சி என்பது
பணம் சார்ந்தது அல்ல
மனம் சார்ந்தது

## மகிழ்ச்சியான நொடிகள்...



உங்களின் ஒரு நாளில் சிறு சிறு மகிழ்ச்சியான நொடிகளை கவனிக்க முயலுங்கள்...

ஒரு புன்னகை, ஒரு இனிய வார்த்தை, ஒரு குளிர்ந்த தென்றல், ஒரு மலரின் மணம், சூரியன் எழும் பொழுது அதன் ஒளி

இதெல்லாம் தான் வாழ்வின் சிறிய மகிழ்ச்சிகள்.

இந்தச் சிறு நொடிகளை நீங்கள் தேடி காண கற்றுக்கொண்டால், அவை தினந்தோறும் அதிகரித்து, உங்கள் வாழ்க்கையை அமைதியாலும் ஆனந்தத்தாலும் நிரப்பிவிடும்.

* சிறிய சந்தோஷங்களை கண்டுபிடியுங்கள்... பெரிய மகிழ்ச்சிகள் தானாக வந்து சேரும்.

நன்றி - ஆனந்தி

## பெண்களின் அஸ்த்திரங்கள்



" பெண்கள் படிப்பும் வேலையும் சொந்தக் காலில் நிற்கின்ற தைரியமும் ஒரு பக்கம் பெண்கள் சமுதாயத்திற்கு மா பெரும் வெற்றி தான் . ஆனால் மறுபக்கம் பெரிய ஈடு செய்ய முடியாத தோல்வி மறைந்து இருக்கிறது என்றார் மகாதேவன் தன் மனைவி ஆசிரியை சரஸ்வதியிடம் அழுத்தமாக .

மகாதேவன் பெண்கள் வளர்ச்சி துறையின் பெரிய அதிகாரி . சர்வே எடுப்பதில் வல்லவர் .

பெண்கள் வெற்றி நல்லா கண்ணுக்கு தெரியுது மறுபக்கம் தோல்வின்னு சொல்றீங்களே அது எப்படி என்று கேட்டாள் சரஸ்வதி .

சின்னப் பெண்கள் வயதும் அவர்களது பருவமும் ஒரு காரணம். காசும் பணமும் இருக்கிற தெம்பு கண்ணை மறைக்கும் காமம் தனிமை கொடுத்த விலை காதல் . காதல் வலையில் சிக்கி வாழ்க்கை பாழாக போகிறது சரஸ்வதி என்று முடித்தார் மகாதேவன் .

எப்படிங்க எனக்கு புரியா மாதிரி உங்க சர்வே ரிப்போர்ட்டை சொல்லுங்க என்றாள் சரஸ்வதி .

சொல்றேன் கேளு சரஸ்வதி , பல பெண் பிள்ளைகள் முடிவும் எடுக்க முடியாமல் பெற்றோர்களின் பேச்சுக்கு செவி சாய்க்கவும் முடியாமல் கண்மூடித்தனமாக காதலன் பக்கம் சாயவும் முடியாமல் தற்கொலை செய்து கொண்டு உயிரை மாய்த்துக் கொள்கிறார்கள் சரஸ்வதி என்றார் மகாதேவன் .

பெண்கள் வளர்ச்சி அவர்களுக்கே ஆபத்தாக முடிகிறதா ...?" அதை தடுக்க என்ன வழி சொல்லுங்க என்று கேட்டாள் சரஸ்வதி .

சொல்றேன்ம்மா, பாதுகாப்பான பயணம் , தவிர்க்க வேண்டிய இரவுப் பயணம் ,தேவை இல்லாமல் வெளியில் சென்று இரவு உணவு எடுப்பது , நிரந்தரப் பணி , தனிமையை விரட்டும் உறவுகள் , வேண்டாத தனி மனம் விரும்பும் சுற்றுலா பயணம், மன பாரத்தை பகிர்ந்து கொள்ள நல்ல நண்பர்கள் .

தாய் தந்தையரிடம் ஒளி மறைவு இல்லாத பேச்சு , தேவைக்கு தான் பணம் ஆடம்பர செலவுகளுக்கு இல்லை என்கிற உறுதியான எண்ணம் அழுத்தமா வேணும் அவ்வளவு தான் சரஸ்வதி பெண்கள் சமுதாயம் ஆல் ரைட் ஆயிடும் என்றார் மகாதேவன் .

எவ்வளவு அழகா பெண்கள் பாதுகாப்பு எதிர்கால இலக்கு இருக்கனும்ன்னு சொல்லிட்டாரே இதை புரிந்து கொண்டு இந்தக் கால ஹைடெக் இளம் பெண்கள் போவார்களா என்று தன் பெண் குழந்தை சரளா தலையில் கையை வைத்து யோசித்தாள் சரஸ்வதி.

இனி பிறக்கும் பெண் குழந்தைகளுக்கு இப்போது இருக்கும் மாணவியர்களுக்கு விழிப்புணர்வு தனிப் பாடமா வகுப்பில் கற்பிக்க வேண்டும் என்று உறுதியாய் சொல்லிய படி செயலில் ஈடுபட தொடங்கினாள் ஆசிரியை சரஸ்வதி தன் வகுப்பு மாணவிகளுக்கு முதல் அனுபவ பாடம் எடுக்கவும் தொடங்கி விட்டாள் .

இனி பெண்கள் எதிர்காலம் பலம் தான் .

ஆர்.சீதாராமன்.

- சீர்காழி

## சிரிப்பு வருது.! சிரிப்பு வருது.!!



நண்பன்-1 : "பொதுவா உனக்கு நேர் எதிரான ஒரு பொண்ணை செலக்ட் பண்ணினா, லைஃப் சந்தோஷமா இருக்கும் தெரியுமா?"

நண்பன்-2 : "அதனாலதான் நல்ல பணமுள்ள பொண்ண தேடிட்டிருக்கேன்"



## தினம் ஒரு சமையல்



## கேழ்வரகு குழி பணியாரம்

தேவையான பொருட்கள்:



| தேவையான பொருட்கள் | |
|---|---|
| ரவை | -1/2 கப் |
| கேழ்வரகு மாவு | -ஒரு கப் |
| புளிக்காத தயிர் | -ஒரு கப் |
| தண்ணீர் | -1/2 கப் |
| எண்ணெய் | -2 டேபிள் ஸ்பூன் |
| கடுகு | -ஒரு டீஸ்பூன் |
| சீரகம் | -ஒரு டீஸ்பூன் |
| உளுந்து | -ஒரு டேபிள் ஸ்பூன் |
| கடலைப்பருப்பு | -ஒரு டேபிள் ஸ்பூன் |
| பச்சை மிளகாய் | -2 |
| வெங்காயம் | -ஒன்று |
| பெருங்காயம் | -1/4 டீஸ்பூன் |
| கருவேப்பிலை | -2 கொத்து |
| கொத்தமல்லி பொடியாக நறுக்கியது | -ஒரு கைப்பிடி அளவு |
| உப்பு | -தேவையான அளவு |

செய்முறை:

முதலில் ஒரு பாத்திரத்தை எடுத்துக் கொள்ளுங்கள். அதில் ரவை, கேழ்வரகு மாவு, தயிர், தண்ணீர் இவை நான்கையும் ஒன்றாக சேர்த்து நன்றாக கலந்து 20 நிமிடம் மூடி போட்டு மூடி வைத்துக் கொள்ளுங்கள். 20 நிமிடம் கழித்து மிக்ஸியில் இந்த மாவை சேர்த்து ஒரு நிமிடம் மட்டும் அரைத்து எடுத்துக் கொள்ளுங்கள். வேறு தண்ணீர் எதுவும் சேர்க்கக்கூடாது.

அரைத்த இந்த மாவை அப்படியே ஒரு பாத்திரத்தில் மாற்றிக்கொள்ளுங்கள். இப்பொழுது அடுப்பில் ஒரு கடாயை வைத்து கடாய் சூடானதும் அதில் எண்ணெயை ஊற்ற வேண்டும். எண்ணெய் நன்றாக காய்ந்ததும் அதில் கடுகு, சீரகத்தை போட்டு கடுகு வெடித்ததும் உளுந்து, கடலை பருப்பையும் சேர்த்து உளுந்து மற்றும் கடலைப்பருப்பின் நிறம் மாறும் வரை வதக்க வேண்டும்.

இவற்றின் நிறம் மாறிய பிறகு பொடியாக நறுக்கிய பச்சை மிளகாய், பொடியாக நறுக்கிய வெங்காயம், கருவேப்பிலை போன்றவற்றையும் போட்டு இதனுடன் பெருங்காயத் தூளையும் சேர்த்து நன்றாக வதக்க வேண்டும். இவை அனைத்தும் நன்றாக வதங்கிய பிறகு அதை அப்படியே எடுத்து நாம் தயார் செய்து வைத்திருக்கும் மாவில் சேர்த்து விட வேண்டும். கடைசியாக பொடியாக நறுக்கிய கொத்தமல்லி தலையையும் மாவில் சேர்த்து தேவையான அளவு உப்பையும் சேர்த்து நன்றாக கலந்து கொள்ளுங்கள். குழிப்பணியார மாவு தயாராகிவிட்டது.

இப்பொழுது அடுப்பில் குழிப்பணியார கல்லை வைத்து கல் சூடானதும் அனைத்து குழிகளிலும் எண்ணெய் அல்லது நெய்யை ஊற்றிக் கொள்ளுங்கள். அவை காய்ந்ததும் கரண்டியை பயன்படுத்தி மாவை எடுத்து குழியில் ஊற்ற வேண்டும். ஒரு புறம் வெந்ததும் அதை திருப்பிப்போட்டு மறுபுறமும் வேக வைத்து எடுத்தால் சுவையான ஆரோக்கியமான கேழ்வரகு குழிப்பணியாரம் தயாராகி இருக்கும். இதற்கு தொட்டுக் கொள்வதற்கு தேங்காய் சட்னி அருமையாக இருக்கும்.

## சிறுகுறிஞ்சா நன்மைகள்



சிறு குறிஞ்சாவின் மருத்துவ பயன்கள்! பல வகையான நேய்களுக்கு மருந்தாகும் அபூர்வ மூலிகை!

எதிர் அடுக்குகளில் அமைந்த இலைகளை உடையது சிறு குறிஞ்சான். இலைக் கோணத்தில் அமைந்த பூங்கொத்துக்களையும் உடைய சுற்றுக்கொடி இனம் இது. முதிர்ந்த காய்களில் இருந்து பஞ்சு பொருந்திய காற்றில் பறக்கக்கூடிய விதைகளைக் கொண்டது. இலை, வேர், மருத்துவக் குணம் உடையது. இலை பித்தம் பெருக்கும். தும்மலை உண்டாக்கும். மேலும் வாந்தி உண்டாக்கி நஞ்சை முறிக்கும் குணம் உடையது. தமிழ்நாடெங்கும் சிறு காடுகளில் தானாகவே வளர்கின்றது.

சிறு குறிஞ்சான் மூலிகை சர்க்கரை வியாதிக்கு மிகச்சிறந்த மருந்து. இது வேலிகளில் கொடியாக படரும். கசப்புச் சுவை உடையது. இலை சிறிதாகவும், முனை கூர்மையாகவும் மிளகாயிலை போன்று காணப்படும். மலையைச் சார்ந்த காடுகளில் இது அதிகம் வளர்கிறது. இத்தகைய தாவரங்களுக்கு சர்க்கரை கொல்லிகள் என்று தமிழில் சொல் வழக்கு உண்டு. முழுத்தாவரமும் மருத்துவகுணம் கொண்டது. இலைகள், விதைகள், வேர் மருத்துவ குணம் கொண்டவை.

## புதிய PROJECTல் கமிட்டாகியுள்ள சீரியல் நடிகையும், பிக்பாஸ் பிரபலமுமான பவித்ரா... முழு விவரம்




விஜய் தொலைக்காட்சியில் ஒளிபரப்பான சீரியல்களில் நடித்த பிரபலங்கள் அனைவருமே மக்களிடம் மிகவும் பிரபலம்.

2013ம் ஆண்டு மகாபாரதம் தொடரில் நடிக்க தொடங்கியவர் அதன்பின் ஆபிஸ், கல்யாணம் முதல் காதல் வரை, சரவணன் மீனாட்டி, பகல் நிலவு, ராஜா ராணி, ஈரமான ரோஜாவே, தென்றல் வந்து என்னை தொடும் என தொடர்ந்து தரமான சீரியல்களாக நடித்து வந்தார்.

கடந்த வருடம் பிக்பாஸ் 8வது சீசனில் கலந்துகொண்டு 3வது ரன்னராக வந்தார். பிக்பாஸ் பிறகு ஜனனி அடுத்து எந்த ஒரு தொடரிலும் கமிட்டாகாமல் இருந்தார்.

நிறைய போட்டோ ஷூட் புகைப்படங்கள் வெளியிடுவது, தனியார் நிகழ்ச்சிகள் கலந்துகொள்வது என பிஸியாக இருந்தார். இந்த நிலையில் பவித்ரா ஜனனி புதிய வெப் தொடர் ஒன்றில் நடித்துள்ளார்.

Regai என பெயர் வைக்கப்பட்டுள்ள இந்த வெப் தொடர் Zee 5ல் வரும் நவம்பர் 28ம் தேதி வெளியாகவுள்ளதாம்.



Stunning லுக்கில் சோபிதா வெளியிட்டுள்ள புகைப்படங்கள் இணையத்தில் வைரலாகி வருகிறது. இதோ அந்த போட்டோஷூட்:

## சினிமா

## விஜய் அஜித்துக்கு அந்த பழக்கமே இல்லை.. ரஜினி பற்றி தேவா சொன்ன விஷயம்

பிரபல இசையமைப்பாளர் தேவா தற்போது அளித்திருக்கும் ஒரு பேட்டியில் ரஜினி பற்றி ஒரு விஷயத்தை கூறி இருக்கிறார்.

அந்த பழக்கம் அஜித், விஜய் போன்ற முன்னணி நடிகர்களிடம் இல்லவே இல்லை என அவர் கூறி இருக்கிறார்.

என்னுடைய பாட்டை எந்த ஹீரோவும் கால் செய்து பாராட்ட மாட்டாங்க. ரஜினி மட்டும் தான் போன் செய்து பாராட்டுவார். விஜய், அஜித்துக்கு பல ஹிட் பாடல்கள் கொடுத்து இருக்கிறேன்.

ரஜினி தவிர மற்ற நடிகர்களுக்கு அந்த பழக்கம் இல்லை போல என விட்டுவிடுவேன் என தேவா கூறி இருக்கிறார்.



Published by R.S ROSHINE Printed by R.S. ROSHINE On behalf of R.S. ROSHINE Printed at J.M. Process, No 29, V.N. Doss Road, BorderThottam, Mount Road, Chennai – 600002.
and Published From NO. 42/62, Buchammal Street, 1st Floor, New Washermenpet, Tondiarpet, Chennai, Tamilnadu – 600081. Editor: R.S.ROSHINE, PH: 8122836299, e-mail: anandabhaskarnews@gmail.com